திஇந்து தமிழ் 19/01/2020

# மாற்றுத் திறனாளி மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்

■ சென்னை

ஆராய்ச்சி படிப்புகளை படிக்கும் மாற்றுத் திறனாளிகள் மத்திய அரசின் உதவித்தொகை பெற பிப்ரவரி 29-ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என யுஜிசி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பல்கலைக்கழக மானியக் குழு (யுஜிசி) வெளியிட்ட செய்திக்குறிப்பு:

எம்பில், பிஎச்டி ஆராய்ச்சிப் படிப்புகளை மேற்கொள்ளும் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு மத்திய அரசு கல்வி உதவித்தொகை வழங்குகிறது. அதன்படி எம்பில் படிக்கும் மாண வாகளுக்கு மாதம் ரூ.25,000 உதவித்தொகையுடன், இதர செலவுகளுக்கு ஆண்டுக்கு ரூ.12,000 வழங்கப்படும்.

பிஎச்டி மாணவர்களுக்கு அதிகபட்சமாக 5 ஆண்டுகள் உதவித்தொகை தரப்படும். இவர்களுக்கு முதல் 2 ஆண்டுகள் மாதம் ரூ.25,000 உதவித் தொகை, இதர செலவுகளுக்கு ஆண்டுதோறும் ரூ.12,000 அளிக்கப்படும். 3-ம் ஆண்டு முதல் மாதம் ரூ.28,000 உதவித்தொகையும், ஆண்டுதோறும் ரூ.25,000 செலவினத் தொகையாகவும் வழங்கப்படும். இந்தக் கல்வி உதவித் தொகையைப் பெறவிரும்புபவர்கள் www.ugc.ac.in/ugcschemes என்ற இணையதளம் வழியாக பிப்ரவரி 29-ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.